**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.20/2022 - DW-1**

| | |
|---|---|
| Name | திரு.கோட்டீஸ்வரன் |
| Father Name | திரு.திருநாவுக்கரசு |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **22.06.2026.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

வாதி என் உறவினர் ஆவார். வாதி என்ன வழக்கு போட்டுள்ளார் என்றால் அவர் கொடுத்த கடன் தொகைக்கு சொத்தை எழுதி கேட்கிறார். நானும், வாதியும் ஒரு ஒப்பந்தம் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் பன்னீர்செல்வம் மற்றும் சிவா ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளனர். அந்த ஒப்பந்தத்தில் கண்டுள்ள இடம் அரப்பாக்கத்தில் நால்வர் நகரில் உள்ளது. அந்த ஒப்பந்தம் போட்ட பிறகு அந்த சொத்திற்குரிய மூலப்பத்திரங்களை நான் வாதியிடம் கொடுத்தேன். இந்த வழக்கை வாதி என் மீது மட்டும் போட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தம் மொத்தம் எவ்வளவு தொகைக்கு போடப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. முன்பணமாக ரூ.5 லட்சத்தை வாதி எனக்கு கொடுத்தார். முன்பணம் ரூ.5 லட்சத்தை வாதி எனக்கு ரொக்கமாக கொடுத்தார். அதன் பிறகு வாதி என் வங்கி கணக்கு மூலம் எனக்கு தொகை கொடுத்தார். அந்தத் தொகை எவ்வளவு என்று தற்போது ஞாபகமில்லை. நான் வாதியிடம் பெற்றுக் கொண்ட பணத்திற்கு ரசீது கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே இந்த வழக்கில் நான் ஆஜராகாமல் ஒருதலைப்பட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். ஒருதலைப்பட்ச தீர்ப்பின் அடிப்படையில் வாதி கிரைய பாக்கித் தொகையை நீதிமன்றத்தில் செலுத்தியுள்ளார் என்பது பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தப்பத்திரத்தின்படி வாதி பாக்கித் தொகையை செலுத்திவிட்டதால் அதைப் பெற்றுக்கொண்டு நான் வாதிக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு வாதி எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் கிரைய ஒப்பந்தப்பத்திரத்தின் படி கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்க வாதி என்னை கேட்டிருந்தார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பைப் பெற்றுக்கொண்டு அதற்கு நான் என் வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு கொடுத்தேன். அந்த பதில் அறிவிப்பில் நான் கிரைய முன்பணம் பெற்றுக்கொண்டது பற்றி ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பதில் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள பன்னீர் செல்வத்திற்கும்,

இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எனக்கும், வாதிக்கும் மட்டுமே கிரைய ஒப்பந்தம் என்பதால் இந்த வழக்கிற்கு பன்னீர் செல்வம் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை தவறான சங்கதிகளுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மொத்தம் ரூ.26 லட்சம் முன்பணம் வாங்கியிருக்கிறேன் என்றால் வாதியும், பன்னீர் செல்வமும் சேர்ந்து மொத்தம் ரூ.26 லட்சம் கொடுத்தார்கள். வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றாலும், பன்னீர் செல்வம் வாதிக்காக தான் என்னிடம் பணம் கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளுடன் வழக்கு நடத்துகிறேன் என்றாலும், பன்னீர் செல்வத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் ஏதும் இல்லை என்றாலும், வாதி நீதிமன்றத்தில் செலுத்தியுள்ள கிரைய பாக்கித்தொகையை பெற்றுக்கொண்டு நான் வாதிக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN Date: 2026.06.22 17:08:39 -0400

I Additional District Judge,
Ranipet.